# "the clearing clerks"

**(அன்றும் இன்றும் என்றும்)**

கண்டத்தில் விட்டச் சோறு
காத்திருக்க வாய்ப்பில்லை
காத்திருந்தால் வாழ்க்கை யில்லை;
என்பதைப் போல்,
தண்டத்தைக் கையிலேந்தும் வீரர்களாய்,
'பில்'லேந்தும் பெருமக்கள்,
கூவிக் கூக்குரலிட்டு,
கொள்கைதனைப் பறைவர்;
சத்தியத்தின் திருவிளக்காய்!

கால்வலிக்கக் காத்திருந்த கதைச் சொல்வர்;
நேற்றைக்கே வந்திருந்தோம்; என்றோர்
நெடுங்கதையும் அவிழ்த்திடுவர்;
பக்கத்து வீட்டுப்பாட்டிக்கு பல்போன,
பேத்திக்குப் பல் முளைக்காத,
பரிதாபக் கதைசொல்லி,
விரைந்தோட வேண்டுமென்பர்!

வேலையன்றி வேறில்லை என்றுரைப்பர்;
சந்தேகம் கேட்டுவிட்டால், ஐயகோ!
புரியாத வகைதனிலே புரிந்தவர் போல் குழப்பி,
என்போலே நெறியாளர் எவருண்டு எனக்கூறி,
தயங்காமல் ஒப்பமிட்டால்,
தகைவுடன் தானிருக்கும்;
நானிருக்கேன் 'நம்பிக்கை சொல்' என்பார்.

சந்தேகம் தீராது; தேய்ந்த இசைத் தட்டாய்
திரும்பத் திரும்ப ஒலித்திடுவர்.
கேட்டுக் கேட்டே நம்;
கீழ்த்தொண்டை வலியெடுக்கும்
பாட்டியார் புகட்டிய,
செவ்வெண்ணெய்க் கரைந்துவிடும்!

குரல்வளையும் பேச மறுக்கும்;
அவர் மட்டும் சொல்வதெல்லாம்;
சொல்லிச் சாதிப்பார்
தொண்டர் முதல் தலைவன் வரை
ஒருசேரக் கதை படைக்கும்;
உன்னத மக்களவர்.

தேடிநாமேத் தெளிந்து விட்டால்,
தேவையில்லை தொல்லையும் கூக்குரலும்!

-வேறு-

பற்றற்ற முனிவரைப் போல்
பாங்கான நெறியுடையோர்
திட்டினால் முணுமுணுப்பர்
திட்டாரை இடை மறிப்பர்
மத்தளம் போல் இவர் வாழ்வு;
மரியாதை அறியாத மனமுடையார்
மரியாதை தெரியாத குணமுடையார்!

தன் வேலைதான் முடிக்கும்
தகைவன்றி வேறறியார்;
அந்நிலையில் காதில் பஞ்சிருக்கும்;
அடுத்தவர் மனம் புரியாத நிலையிருக்கும்!

சொல்வதைக் கேட்பாரில்லை
கேட்டதைச் சொல்வாரில்லை
இவருள்ளும் சிலருண்டு; தெளிந்த மனம்;
வளர்ந்த குணம்; பொறுமையுடன்
காத்திருந்து, காரணம் அறிந்து பின்னே,
விளக்கமுடன் வேலை முடித்திடுவர்.

-வேறு-

நல்லாரும் சிலரிங்கே,
நலமுடனே இருப்பதனால்,
எல்லோர்கும் பெய்யும் மழை என்பதாக,
கோபமும் குணமுமாக,
கொப்பளிக்கும்;
வியர்வைக் குளிரைப் போல்,
தொடரும் நாள்களுமே!

**-கு. ப. அசோகன், (January 2003)**

## The Clearing Clerks (நாங்கள்)

**வெயிலோ; மழையோ; வேறென்ன நிலையோ!
பொழுதும் இரவும் புலர்ந்தும்;
மறைந்தும்;
நாள்கள் போயிட போயிட,**

**கண்களை அழுத்தும்,
தூக்கமும்; சோர்வும்;
நலிந்துப் போயும்,
நடக்க மறுக்கும் கால்களும்;
கனவு போலே சுழன்று ஓட,
சரக்குகள் இறங்கி ஏறி;
அப்படா என்றுச் சாயும் போழ்தில்,**

**கடகட வென்றுப் பசியால் உருளும்
வயிறு சொல்லும்,
பகல் முழுதும்;
என்னைநினைக்காதப்;
பாவியோ நீ என்றே!**

**- கு.ப. அசோகன், (25-01-2005
-10.10.PM)**

## "அண்ணா"! "அண்ணா"!! "அண்ணா"!!!

அதிகாரிகளை "அண்ணா" என்றழைக்கும் அவல நிலைக் கொள்வாரின்று!
தெருக்கூத்து முற்றமென்றோ மளிகைக்கடை வாயிலென்றோ மனம் வெதும்பும்!
"அண்ணா" என்னும் அவலம் வேண்டாம்; அய்யா என்னும் பிரித்தானிய
நெறிமுறையை விரும்பா நீங்கள்; பதவியின் பெயராலே அழைத்தால் போதும்!

அதையும் நீங்கள் அவலம் என்றால்; அமரிக்கா போல்; பெயரிட்டு அழைத்தாலும்
அமைதி கொள்வோம்; "அண்ணா" என்பதைச் சரிகட்டும் உபாயம் போல் கை கொள்வீர்,
கேட்பீர் கொஞ்சம்; காணும் நண்பர் கேவலமாய்க் கேட்கின்றார்; "இது என்ன உறவு முறை?"
பொருளையும் காட்டாமல், சோதனையும் செய்யாமல் "குறிப்புரை" கேட்பதற்கு அழைப்பீர் "அண்ணா"

பலமுறை பார்த்தீர் "அண்ணா"; பக்கத்துப் பணிகயத்தில் பார்த்தீர் "அண்ணா" குறிப்புரை;
தகைவுடனேத் தந்தால் "அண்ணா" நலம் கொள்வேன் என்றுரைப்பீர்;
அன்றைய குறிப்புரையைக் கொண்டே இன்றும் எடுத்துக் கொள் என்றால்;
ஐயோ "அண்ணா"; எனைப் பார்த்துக் கேலி ஏன் செய்வீர் என்றுரைப்பீர்;

"அண்ணா" என்னும் அவலம் வேண்டாம்; பெயரிட்டு அழைத்தால் போதும் என உரைத்தால்;
ஐயோ! இனி "அய்யா" என்றே அழைப்பேன் 'அண்ணா'; "அண்ணா" தவறாகக் கருதாதீர்!
என்றே அண்ணாவை அழுத்தமாக ஆக்கி வைப்பீர்; ஓரைந்து ஆண்டினுள்ளே இந்த அவலம்
ஓங்கி வளர்ந்ததுவே! காரணத்தைக் காண்கின்; முறையின்றி பணி செய்ய வந்ததுதான்!

அடுத்து வரும் சில நாளில் ஆணையரும் "அண்ணா" வாகும் அவலம் காண்போம்!
பணியறியா அவலம்தான் "அண்ணா" என்றழைக்கும் நிலையைத் தூண்டும்!
பணியகத்தில் தினம் தோறும் பார்ப்பதினால்; பலவாக அவருழைக்கும் நிலையைக் கண்டு,
நாம் காட்டும் பரிதாபத்தால் விளையும் புன்சிரிப்பே நம்மை "அண்ணா"வாய்ச் செய்யும்!

முதலாளி அழைப்பார் "ஐயா" என்றே; அவரின் தொழிலாளி முறை கொள்வார் "அண்ணா" என்றே!
கேட்கின்ற கேள்விக்கெல்லாம் அவர் சொல்வார்; "அண்ணா" உதவுங்கள்; நான் மிகவும் நல்லவனே!
தம்பிபோல், கேட்கின்றேன்; உதவிடுங்கள்; நாளைவரும் கப்பலின் சரக்குக்கு; இன்றே குறிப்புரையும்
வெளியேற்றும் உத்திரவும் வேண்டும் "அண்ணா"; என் வேலை போகும் உதவிடுங்கள்; "அண்ணா" "அண்ணா"

காகிதத்தைக் கேட்காதீர் அது கப்பலிலே வரவில்லை; வங்கியிலே வரைவோலைக் காணாமல் வராது;
கொள்கலனின் நெறியாளன் கொடுங்கோலன், சரக்குகளைச் சேர்த்தால்தான், பலவீட்டில் உலை கொதிக்கும்!
மதிப்பீட்டு அதிகாரிதான் எங்களின் குல தெய்வம்; "அண்ணா" உதவி வேண்டும்; எனப்பலவாய்க் கூறி,
மதிப்பீட்டு அதிகாரிகளே எங்களின் மனை விளக்கு; எல்லாம் கூறி விட்டேன் "அண்ணா" உதவிடுங்கள் என்பார்!

**- கு.ப. அசோகன் (07-06-2010)**

## Experience in EDI System with Clearing Clerks

தொல்லியக் கதைகள் வழியே தொடருதே நாளும் பொழுதும்;
நல்லியப் பொழுதாய் நாளை நகர்த்திட முனைந்து நின்றால்,
முல்லைப்பூ பாயின் கீழே முட்கள் நிறைந்தார் போலே கணினி;
பல்லைக் காட்டியது போலொரு பரிதாபச் சூழல் செய்யும்; இங்கு

கள்ளினைத் தேடிமலரைச் சூழ்ந்திடும் வண்டாய் மக்கள், என்னைக்
கிள்ளியே முகர்வார் போலேச் சூழ்ந்து கேள்விக்கணை தொடர;
அள்ளாத இன்பம் தேடி விசையை அழுத்திப் பார்க்க, என்முதுகில்
தள்ளாத குறையாய் நின்று, திரையைத்தான் வெறித்துப் பார்ப்பர்!

சொல்லியச் சொல்லை யெல்லாம் சுகமாய்ப் புறத்தே தள்ளி, நாளும்
நல்லதோர் பிள்ளையாக விசைப் பலகையை வெறித்து நிற்பர்;
மல்லையின் சிற்பம் போலே மகிழ்வின்றி திகைத்து நிற்பார்,
அல்லியாய் மலர்வார் திரையில் அனைத்தையும் காணும் பொழுது!

**- கு.ப. அசோகன். (2007)**